வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 19.1.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நடப்பாண்டில் இந்தியாவின் பொருளாதா வளர்ச்சி பற்றிய சர்வதேச செலாவணி நிதியத்தின் கணிப்பு, 7.3 சதவிகிதமாக உயர்த்தப் பட்டுள்ளது.

ஜி ராம் ஜி சட்டம் குறித்து, காங்கிரஸ், தவறான தகவல்களை மக்களிடையே பரப்புவதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் குற்றம் சாட்டி உள்ளார்.

மத்திய சுகாதார துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் நாளை புதுச்சேரியில், ஜிப்மர் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, பட்டங்களை வழங்குகிறார்.

மாகேயில் பள்ளுர் சுகாதார மையத்திற்கான உள்நோயாளிகள் பிரிவு அமைக்கும் பணிகளுக்கு, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்.

ஐஎம்எப்

நடப்பாண்டில் இந்தியாவின் பொருளாதா வளர்ச்சி பற்றிய சர்வதேச செலாவணி நிதியத்தின் கணிப்பு, 7.3 சதவிகிதமாக, 0.7 சதவிகிதப் புள்ளிகள் உயர்த்தப் பட்டுள்ளது. வரவிருக்கும் நிதியாண்டில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, 6.4 சதவிகிதமாக இருக்கும் என்றும் மதிப்பிடப்படுள்ளது. 2026-ஆம் ஆண்டில் உலக அளவிலான பொருளாதார வளர்ச்சி 3.3 சதவிகிதமாக நீடிக்கும் என்றும், செயற்கை

நுண்ணறிவின் பயன்பாட்டினால் உற்பத்தி திறன் அதிகரிக்கும் என்றாலும், முதலீடுகள் விலகவும், சர்வதேச அளவிலான நிதி நிபந்தனைகளால் வளரும் நாடுகளில் பக்க விளைவுகள் ஏற்படவும் வாய்ப்புக்கள் இருப்பதாக ஐஎம்எப் மேலும் தெரிவித்துள்ளது.

*உதய நாள்*

இன்று, தேசிய பேரிடர் மீட்பு படையின் உதய நாளை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். தேசிய பேரிடர் மீட்பு படையில் இடம் பெற்றுள்ள வீரர்-வீராங்கனைகள், நெருக்கடியான காலக் கட்டங்களில், மிகுந்த மன உறுதி மற்றும் தொழில் முறைத் திறன்களுடன் நாட்டிற்கு ஆற்றி வரும் சேவைகளை நாடே போற்றுவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார். பேரிடர் சம்பவங்களின் போது தேசிய பேரிடர் மீட்பு படையினர் பல உயிர்களைக் காப்பாற்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி மறு நம்பிக்கை ஊட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார். தேசிய பேரிடர் மீட்பு படையினரின் திறன்களும், கடமைப் பற்றும் உலக அளவில் உயர்தர சேவை என்பதற்கான எடுத்துக் காட்டாகவே திகழ்வதாக பிரதமர் மேலும் கூறி உள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உள்ளிட்டவர்களும், தேசிய பேரிடர் மீட்பு படையினருக்கு உதயநாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

*ஜி ராம் ஜி*

விக்சித் பாரத்-ஜி ராம் ஜி சட்டம் குறித்து, காங்கிரஸ், தவறான தகவல்களை மக்களிடையே பரப்புவதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் குற்றம் சாட்டி உள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முந்தைய மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ் காங்கிரஸ் வழங்கிய உரிமைகள், காகித அளவிலேயே நின்றுவிட்டதாக கூறினார்.

புதிய ஜி ராம் ஜி சட்டம், நாடு முழுவதிலும், ஒவ்வொரு கிராம பஞ்சாயத்து பகுதியிலும் அமல்படுத்தப்படும் என திரு சவ்கான் தெரிவித்தார். கிராமப்புற குடும்பங்களுக்கான 100 நாள் வேலை உத்தரவாதம், புதிய சட்டத்தின் கீழ், 125 நாட்களாக உயர்த்தப் பட்டுள்ளதாகவும், பழைய திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 10 கோடி சொத்துக்களில் எட்டரை கோடி சொத்துக்கள், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் உருவாக்கப்பட்டவை என்றும் அவர் கூறினார். ஜி ராம் ஜி சட்டம், மக்களின் வேலை உரிமையை பறிக்கும் வகையில் அமைந்திருப்பதாக, எதிர்கட்சிகள் கூறுவது, அரசியல் நோக்கம் கொண்டது என்றும், புதிய சட்டத்தின் கீழ் வழங்கப்படும் கூலி, பழைய திட்டத்தை விட அதிகமாக இருக்கும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. புதிய சட்டத்தில், ஒப்பந்ததாரர்களுக்கு, வெளிப்படையாகவே தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் திட்டச் செலவுகள், 60-க்கு 40, 90-க்கு 10 என்ற அளவில், முறையாக பகிர்ந்து கொள்ளப்படுவதால், மாநிலங்களுக்கு கூடுதல் சுமை இராது என்றும் அரசு கூறி உள்ளது.

*மின் விநியோகம்*

நாட்டின் மின் வினியோக நிறுவனங்கள் கடந்த நிதி ஆண்டில், 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய்க்கு மேல் இலாபம் ஈட்டி இருப்பதாக, மத்திய மின் துறை அமைச்சர் திரு மனோகர் லால் தெரிவித்துள்ளார். இன்று டெல்லி ஐஐடி வளாகத்தில் மின்சாரம் மற்றும் ஒழுங்குமுறை தொடர்பான தகைசால் மையத்தை திறந்து வைத்துப் பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார். மின் விநியோகத் துறையில் இழப்பை தடுப்பது குறித்து, மத்திய அரசு, நாடாளுமன்றத்தின் அடுத்த பட்ஜெட் கூட்டத் தொடரில் சட்டத் திருத்தம் கொண்டு வரும் என்றும் அவர் கூறினார். புதிய தகைசால் மையம், மின் துறையில், நாட்டின் நன்மைக்கான முக்கிய ஒழுங்குமுறை சீர்திருத்தங்களைக் கொண்டு வரும் என்றும், மற்ற நாடுகளுக்கு வழிகாட்டுவதாக இந்தியாவின் சீர்திருத்தங்கள் அமையும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

*பிஜேபி*

பிஜேபி தேசிய தலைவர் பதவிக்கான தேர்தலில் வேட்புமனு தாக்கல், புதுடெல்லியில் உள்ள கட்சித் தலைமையகத்தில் இன்று நடைபெற்றது. வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்ளும் அவகாசம் முடிந்த பின்னர் தேவைப்பட்டால், தலைவர் பதவிக்கான தேர்தல் வாக்குப் பதிவு நாளை நடைபெறும் என்றும், புதிய தலைவரின் பெயர், நாளையே அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மத்திய அமைச்சர் திரு ஜேபி நட்டா, பிஜேபி தேசிய தலைவர் பதவியை வகித்து வருகிறார்.

*ஜிப்மர்*

மத்திய சுகாதார துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் நாளை புதுச்சேரியில், ஜிப்மர் மருத்துவக் கல்லூரியின் 14-ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, படிப்பு முடித்த மாணவர்களுக்கு, பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்குகிறார். ஜிப்மர் வளாகத்தில் உள்ள டாக்டர் ஏ பி ஜே அப்துல் கலாம் கலையரங்கில் நாளை காலை நடைபெறும் இவ்விழாவில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர் திரு நமச்சிவாயம், உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர். பல்வேறு மருத்துவப் பிரிவுகளில், இளங்கலை மற்றும் முதுகலை ஆராய்ச்சி படிப்பு முடித்த 941 பேருக்கு பட்டங்களும் கல்வியில் சிறந்து விளங்கிய 180 பேருக்கு பதக்கங்களும் விழாவில் வழங்கப்பட உள்ளதாக ஜிப்மர் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மாகே-பள்ளூர்*

மாகேயில் பள்ளூர் சுகாதார மையத்தை மேம்படுத்தும் வகையில், 12.75 கோடி ரூபாய் மதிப்பில், 50 படுக்கைகள் கொண்ட நான்கு மாடி உள்நோயாளிகள் பிரிவு அமைக்கும் பணிகளுக்கு, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார். சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், பொது பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் திரு

ரமேஷ் பரம்பத், சுகாதார துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள், மண்டல நிர்வாக அதிகாரி திரு மோகன்குமார் ஆகியோரும் காணொளி காட்சி மூலம் கலந்து கொண்டனர். முதலமைச்சர் திரு ரங்கசாமி நிகழ்ச்சியில் பேசுகையில், மாகே பகுதியின் வளர்ச்சியில் தமது அரசு மிகுந்த கவனம் செலுத்துவதாக தெரிவித்தார். புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மருத்துவக் கல்வி மட்டுமின்றி எல்லாப் படிப்புகளிலும், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கவும், அனைத்து உயர்கல்வி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கவும், அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் கூறினார். தமது அரசு பதவி ஏற்ற பின்னர் அரசுத் துறைகளில் 4 ஆயிரம் பணியிடங்கள், தேர்வு மூலம் மதிப்பெண் அடிப்படையில் நிரப்பப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். முதலமைச்சர் மேலும் கூறுகையில்.........

(வாய்ஸ்- ரங்கசாமி)

*ரங்கசாமி-கடிதம்*

புதுச்சேரி மாகே பகுதியைச் சேர்ந்த உப்பிலத்தளி அஜித் என்பவர் கப்பல் பொறியாளராக, கடந்த டிசம்பர் 16-ஆம் தேதி வர்த்தக கப்பல் ஒன்றில் ஈரானுக்கு புறப்பட்டுச் சென்ற பிறகு, அவரைக் குறித்து எந்த தகவலும், குடும்பத்தினருக்கு கிடைக்கவில்லை என்பதால், ஈரானில் அவரைத் தேடிக் கண்டுபிடித்து மீண்டும் தாயகத்திற்கு அழைத்து வரத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு, முதலமைச்சர் திரு ரங்கசாமி, டெஹ்ரானில் உள்ள இந்திய தூதருக்கு கடிதம் எழுதி உள்ளார்.

*காவல் ஆய்வாளர்*

புதுச்சேரியில் 70 காவல் துறை உதவி ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான உடல் தகுதித் தேர்வு, கோரிமேடு ஆயுதப் படை மைதானத்தில் இன்று தொடங்கி உள்ளது. இதுகுறித்து எமது செய்தியாளர் கூறுகையில்..........

(வாய்ஸ்-கந்தன்)

முறைகேடுகளைத் தவிர்க்கும் வகையில் பல்வேறு கட்டுப்பாடுகளுடன் நடைபெறும் இந்த உடல் தகுதித் தேர்வில் வெற்றி பெறுவோர், அடுத்த கட்டமாக எழுத்து தேர்வுக்கு தகுதி பெறுவர்.

*காரைக்கால்-கார்னிவெல்*

காரைக்காலில், மாவட்ட நிர்வாகமும், பல்வேறு அரசுத் துறைகளும் இணைந்து, நேற்று வரை 3 நாட்களுக்கு நடத்திய காரைக்கால் கார்னிவெல் கலை விழாவில் காரைக்கால் மற்றும் அண்டை தமிழகப் பகுதிகளில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டு, நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர். நேற்று இரவு நடைபெற்ற நிறைவு விழாவில், புதுச்சேரி வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார், குடிமைப்பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு பிஆர்என் திருமுருகன் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.

*வானிலை*

வடகிழக்கு பருவமழை, தமிழ்நாடு-புதுச்சேரி மற்றும் அதனை ஒட்டிய தென்னிந்திய பகுதிகளில் இருந்து இன்று விலகி உள்ளது. இன்று முதல், வரும் 22-ஆம் தேதி வரை, தமிழ்நாடு, மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்து. 21-ஆம் தேதி வரை அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனி மூட்டம் காணப்படும் என்றும், இன்றும், நாளையும் நீலகிரி மாவட்டம் மற்றும் கொடைக்கால் மலைப் பகுதிகளில் உறைபனிக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*கிரிக்கெட்*

மகளிர் கிரிக்கெட்டில் வதோதராவில் இன்று மாலை நடைபெறும் WPL போட்டியில் பெங்களுர்-குஜராத் அணிகள் மோத உள்ளன. 5 அணிகள் பங்கேற்கும் போட்டிகள், நவி மும்பை, வதோதரா ஆகிய இடங்களில் நடத்தப்படுவதும் தற்போது நவி மும்பை போட்டிகள் முடிவடைந்து. வதோதரா போட்டிகள் தொடங்குவதும் குறிப்பிடத் தக்கது.

*இளையராஜா*

மகாராஷ்டிர மாநிலம் சத்திரபதி சாம்பாஜி நகரில் வரும் 28-ஆம் தேதி தொடங்க உள்ள, 11-ஆவது அஜந்தா-எல்லோரா சர்வதேச திரைப்பட விழாவின் பத்மபாணி விருது, பிரபல இசை அமைப்பாளர் இளையராஜாவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் செய்தி-ஒலிபரப்புத் துறை அமைச்சகம் மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சகத்துடன் இணைந்து, மகாராஷ்டிர அரசின் திரைப்பட-நாடக-கலாச்சார மேம்பாட்டுக் கழகம், இந்த திரைப்பட விழாவிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

*ஜெய்சங்கர்*

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று புதுடெல்லியில், போலந்து நாட்டின் துணைப் பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான திரு ராதோஸ்லாவ் ஷீகோர்ஸ்கி-யை, சந்தித்துப் பேசினார். தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ளாத நிலைப்பாட்டை போலந்து வெளிப்படுத்த வேண்டும் என்றும், இந்தியாவின் அண்டை நாடுகளில் தீவிரவாத கட்டமைப்புகளைத் தூண்டுவதில் உதவக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார். போலந்து, இந்திய பிராந்தியத்திற்கு புதியதல்ல என்றும், எல்லை தாண்டிய பயங்கரவாததின் நீண்டகால சவால்களை, அந்நாடு நன்கு அறியும் என்றும் அவர் குறிப்பிட்டார். உக்ரைன் பிணக்கு மற்றும் அதன் தாக்கங்கள் குறித்த இந்தியாவின் கருத்துக்களை, அண்மைக் காலங்களில் பாரீஸ், நியுயார்க் உள்ளிட்ட இடங்களில் தாம் பகிர்ந்து கொண்டுள்ளதாகவும் இந்தியாவைக் குறிப்பாக குறை சொல்வது, நியாயமோ, நேர்மையோ அல்ல என்றும் டாக்டர் ஜெய்சங்கர் கூறினார். மத்திய ஐரோப்பாவில் இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக கூட்டாளி நாடாக போலந்து திகழ்வதையும், கடந்த 10 ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தகம், சுமார் 200 சதவிகிதம் அதிகரித்து இருப்பதையும், அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

தலைப்புச் செய்திகள்

நடப்பாண்டில் இந்தியாவின் பொருளாதா வளர்ச்சி பற்றிய சர்வதேச செலாவணி நிதியத்தின் கணிப்பு, 7.3 சதவிகிதமாக உயர்த்தப் பட்டுள்ளது.

ஜி ராம் ஜி சட்டம் குறித்து, காங்கிரஸ், தவறான தகவல்களை மக்களிடையே பரப்புவதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் குற்றம் சாட்டி உள்ளார்.

மத்திய சுகாதார துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் நாளை புதுச்சேரியில், ஜிப்மர் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, பட்டங்களை வழங்குகிறார்.

மாகேயில் பள்ளுர் சுகாதார மையத்திற்கான உள்நோயாளிகள் பிரிவு அமைக்கும் பணிகளுக்கு, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

--------------------------------------